பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**02 05 2026** **7 15**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்கள் தொகை கணக்கெடுப்பில் முதற்கட்டமாக, வீடுகள் குறித்த கணக்கெடுப்புப் பணிகள் பல்வேறு மாநிலங்களில் தொடங்கியுள்ளன.

2. மேற்குவங்க மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் முறைகேடு நடைபெற்றதாக வந்த புகாரையடுத்து, 15 வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப்பதிவு இன்று காலை தொடங்கியது.

3. இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையிலான பொருளாதார ஒப்பந்தம் இந்திய விவசாயிகளுக்கு பெரும் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

4. மத்திய கிழக்கில் போரை முடிவுக்கு கொண்டுவர ஈரான் வழங்கிய புதிய சமாதானத் திட்டத்தை அமெரிக்க அதிபர்திரு. டொனால்ட் டிரம்ப் நிராகரித்துள்ளார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதற்கட்டமான, வீடுகள் குறித்த கணக்கெடுப்புப் பணிகள் பல்வேறு மாநிலங்களில் தொடங்கியுள்ளன.

ஆந்திரப்பிரதேசம், அருணாச்சலப்பிரதேசம், ஹரியானா, சண்டிகர், மத்தியப்பிரதேசம் மற்றும் சத்தீஸ்கட் ஆகிய மாநிலங்களில் 15 நாட்கள் வழங்கப்பட்ட சுய விவரப் பதிவு காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, தற்போது களப்பணிகள் தொடங்கியுள்ளன.

வரும் 30-ஆம் தேதி வரை பயிற்சி பெற்ற கணக்கெடுப்பாளர்கள் வீடு வீடாகச் சென்று தகவல்களைச் சேகரிப்பார்கள் என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், டெல்லி மாநகராட்சிப் பகுதி, ராஜஸ்தான், மகாராஷ்டிரா, மேகாலயா மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் ஆன்லைன் மூலமாகத் தகவல்களைப் பதிவு செய்யும் சுய விவரப் பதிவு வசதி தொடங்கியுள்ளது.

வரும் 15-ஆம் தேதி வரை பொதுமக்கள் இத்தளத்தைப் பயன்படுத்தலாம்.

அதனைத் தொடர்ந்து, 16 ஆம் தேதி முதல் ஜூன் மாதம் 14ஆம் தேதி வரை இப்பகுதிகளில் கணக்கெடுப்பாளர்கள் களப்பணியில் ஈடுபடுவார்கள்.

பீகார் மாநிலத்தைப் பொறுத்தவரை, சுய விவரப் பதிவுக்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவடைகிறது.

அங்கு நாளை முதல் இம்மாதம் 31-ஆம் தேதி வரை வீடு வீடாகச் சென்று கணக்கெடுக்கும் பணிகள் நடைபெறும்.

2027-ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த டிஜிட்டல் சுய விவரப் பதிவு முறைக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.

இதுவரை சுமார் 82 லட்சம் குடும்பங்கள் அதிகாரப்பூர்வ இணையதளம் வாயிலாக தங்கள் விவரங்களைப் பதிவு செய்துள்ளதாக உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவின் போது முறைகேடுகள் நடந்ததாகப் புகார்கள் எழுந்ததையடுத்து, அங்குள்ள 15 வாக்குச்சாவடிகளில் இன்று மறுவாக்குப்பதிவு நடைபெறுகிறது.

காலை 7 மணிக்குத் தொடங்கிய வாக்குப்பதிவு, மாலை 6 மணி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மக்ரஹட் மேற்கு சட்டப்பேரவைத் தொகுதியில் 11 வாக்குச்சாவடிகளிலும், டயமண்ட் ஹார்பர் தொகுதியில் 4 வாக்குச்சாவடிகளிலும் மறுவாக்குப் பதிவுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது.

மறுவாக்குப்பதிவு நடைபெறும் பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதோடு, வாக்காளர்கள் அச்சமின்றி வந்து வாக்களிக்கத் தேவையான வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையிலான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம், இந்திய விவசாயிகள் மற்றும் சிறு, குறு தொழிலாளர்களுக்குப் பெரும் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து நான்கு ஆண்டுகள்

நிறைவடைந்துள்ள நிலையில், சமூக ஊடக பதிவில் இதனை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருதரப்பு வர்த்தகம் 100 பில்லியன் டாலர்களைக் கடந்து சாதனை படைத்துள்ளதாகவும், சேவைத்துறை சார்ந்த வர்த்தகம் சீரான வளர்ச்சியை எட்டியுள்ளதோடு, புதிய சந்தை வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நவரத்தினங்கள், ஆபரணங்கள், பொறியியல் சாதனங்கள், மின்னணுப் பொருட்கள் மற்றும் விவசாயம் போன்ற முக்கிய துறைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, இந்திய தொழில்துறையினருக்கு கூடுதல் பலனை அளித்துள்ளதாக திரு பியூஷ் கோயல் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

ஹரியானா மாநில வேளாண் விற்பனை வாரியத்தில் நடைபெற்ற சுமார் 10 கோடி ரூபாய் நிதி மோசடி தொடர்பாக, அந்த வாரியத்தின் நிதி மற்றும் கணக்குக் கட்டுப்பாட்டாளராக இருந்த திரு. ராஜேஷ் சங்வான் பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்த மோசடி தொடர்பாக ஏற்கனவே மாநில ஊழல் தடுப்புப் பிரிவு விசாரணை நடத்தி வந்த நிலையில், தற்போது இந்த வழக்கு சிபிஐ-க்கு மாற்றப்பட்டுள்ளது.

முறையான அனுமதி மற்றும் வழிகாட்டுதல்கள் இன்றி தனியார் வங்கியில் கணக்கு தொடங்கி, அரசின் நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதாக திரு. ராஜேஷ் சங்வான் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் தொடர்புடைய வங்கி அதிகாரிகள் மற்றும் இடைத்தரகர்கள் குறித்து சிபிஐ அதிகாரிகள் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

<<<<>>>>

புழக்கத்தில் இருந்த 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளில் சுமார் 98 புள்ளி நான்கு ஏழு சதவீதம் திரும்பப் பெறப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் தேதி பணமதிப்பிழப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளை புழக்கத்தில் இருந்து திரும்ப ப் பெறுவதாக ரிசர்வ் வங்கி அறிவித்தது.

அப்போது சுமார் **3** லட்சத்து **53** ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான நோட்டுகள் புழக்கத்தில் இருந்தன.

கடந்த மாதம் **30**ஆம் தேதி நிலவரப்படி இந்த நோட்டுகளின் மதிப்பு **5** ஆயிரத்து **451** கோடி ரூபாயாக குறைந்துள்ளதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

**2** ஆயிரம் ரூபாய் நோட்டுகளை புழக்கத்தில் இருந்து திரும்பப் பெறுவதாக அறிவிக்கப்பட்ட நாள் முதல் அவற்றை மாற்றிக்கொள்வதற்கான வசதி நாடு முழுவதும் உள்ள ரிசர்வ் வங்கியின் **19** மண்டல அலுவலகங்களில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகவும் அந்த வங்கி கூறியுள்ளது.

<<<<>>>>

'வந்தே மாதரம்' பாடலின் **150-**வது ஆண்டு விழாவையொட்டி, ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் 'நாடாளுமன்ற கலாச்சாரத் திருவிழா மற்றும் சுதேசி திருவிழா நேற்று தொடங்கியது.

**3** நாட்கள் நடைபெற உள்ள இந்த விழாவின் தொடக்க நிகழ்ச்சியில் ஜார்க்கண்ட் மாநில ஆளுநர் திரு. சந்தோஷ் குமார் கங்குவார், முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரன் மற்றும் மத்திய பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் பேசிய ஆளுநர் திரு. சந்தோஷ் குமார் கங்குவார், ஜார்க்கண்டின் பழங்குடியின கலாச்சாரம், நாட்டுப்புற மரபுகள் மற்றும் கைவினைப் பொருட்கள் ஆகியவை விலைமதிப்பற்ற பாரம்பரியம் என்று புகழாரம் சூட்டினார்.

உள்ளூர் கைவினைஞர்களுக்கும் கலாச்சாரப் பாரம்பரியத்திற்கும் இந்த திருவிழா வாய்ப்புக்களை வழங்குவதாக விழாவில் பேசிய முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரன் கூறினார்.

<<<<>>>>

போரை முடிவுக்கு கொண்டுவர ஈரான் வழங்கிய புதிய சமாதானத் திட்டத்தை அமெரிக்க அதிபர்திரு. டொனால்ட் டிரம்ப் நிராகரித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஈரான் தரப்பிலிருந்து சமாதான ஒப்பந்தத்திற்கான முன்மொழிவு வந்துள்ளதை உறுதிப்படுத்தினார்.

இருப்பினும், அந்தத் திட்டம் தமக்குத் திருப்தியளிக்கவில்லை என்றும், அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்துப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஈரானின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனமான 'இர்னா' இந்தப் புதிய திட்டத்தை பாகிஸ்தான் மத்தியஸ்தர்களிடம் ஈரான் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் பதற்றத்தைத் தணிக்கவும், தற்காலிக போர்நிறுத்தம் நீடிக்கவும் அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. அந்தோனியோ குட்ரஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தனது சமூக ஊடகப் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், மத்திய கிழக்கு நெருக்கடி தற்போது மூன்றாவது மாதத்தை எட்டியுள்ளதாகவும், இதனால் ஒட்டுமொத்த மனிதகுலமே பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளார்.

அமைதிப் பேச்சுவார்த்தைக்கு குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபட வேண்டாம் என்று அனைத்துத் தரப்பினரையும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

முன்னதாக நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 'ஹார்முஸ்' நீரிணையை ஈரான் உடனடியாகத் திறந்துவிட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்தப் போக்குவரத்துப் பாதை எவ்வளவு காலம் முடக்கப்படுகிறதோ, அவ்வளவு தூரம் உலகப் பொருளாதாரமும் மனிதகுலமும் பாதிப்பைச் சந்திக்கும் என்று அவர் எச்சரித்தார்.

<<<<>>>>

ஈரானின் ஐஞ்சான் மாகாணத்தில் நிகழ்ந்த பயங்கர வெடிவிபத்தில் அந்நாட்டின் இஸ்லாமியப் புரட்சிகர காவல் படையைச் சேர்ந்த 14 வீரர்கள் உயிரிழந்தனர்.

ஐஞ்சான் மாகாணத்தில் பயன்படுத்தப்படாத வெடிபொருட்களை அகற்றும் பணியில் வீரர்கள் ஈடுபட்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக இந்த வெடிப்பு நிகழ்ந்ததாக தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் 14 வீரர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் சிலர் காயமடைந்துள்ளதாகவும், அவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணைக்கு ஈரான் அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

ஜெய்ப்பூரில் நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய ராஜஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **6** விக்கெட் இழப்புக்கு **225** ரன் எடுத்தது.

**226** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தில்லி அணி **19** புள்ளி ஒரு ஓவரில் **3** விக்கெட்டுகளை மட்டுமே இழந்து இலக்கை எட்டியது.

சென்னையில் இன்று மாலை மணி **7.30**க்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் சென்னை அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

-------------

**17** வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

சீனாவில் நடைபெறும் இந்தப் போட்டி மாலை **5** மணிக்கு தொடங்கவுள்ளது.

---------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் ஜம்ஷெட்பூர் அணி **2-0** என்ற கோல் கணக்கில் கோவா அணியை வென்றது.

இன்று மாலை 5 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி - காசி அணியையும், மாலை மணி 7.30க்கு நடைபெற உள்ள மற்றொரு ஆட்டத்தில் தில்லி அணி - பஞ்சாப் அணியையும் எதிர்கொள்கின்றன.

---------------

டென்மார்க்கில் நடைபெற்று வரும் தாமஸ் கோப்பை பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**